10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 174 செவ்வாய்க்கிழமை நவம்பர் 14 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக பல்கலை மாணவர் பேரணி இன்று

அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.14


தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி ஒன்றை இன்று நடத்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக முன்றலில் மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பேரணியில் மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள், பொது அமைப்புகள் என சகலரையும் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

அனுராதபுரம் சிறையில் உணவு தவிர்ப்பில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோரியும், ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்த வலியுறுத்தியும், யாழ்.பல்கலைக் கழக சமூகம் அண்மைக்காலமாக தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றது.

06

## இராணுவ ட்ரக் விபத்து: 11 சிப்பாய்கள் படுகாயம்



கொழும்பு, நவ.14

இராணுவ ட்ரக் விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 11 பேர் கடுங் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பயிற்சிக்காக சென்று கொண்டிருந்த இராணுவத்தினரே இந்த விபத்தில் சிக்கினர்.

நேற்று மதியம் 1.30 மணியளவில் கம்பளை - நுவரெலியா வீதியில் ரம்பொட பலாகொல்ல பகுதியில் பெரும் வளைவில் ட்ரக்கைத் திருப்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுது.

காயமடைந்தவர்களில் ஐவர் மேலதிக சிகிச்சைக்காக கம்பளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச)

## பலாலி விரைவில் விடுவிக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ.14

ஆயுதக் களஞ்சியங்கள் அகற்றப்பட்டதும் இராணுவப் பிடியில் இருந்து பலாலி விடுவிக்கப்படும். அங்கிருந்து ஆயுதங்கள் அகற்றப்படுகின்றன. விரைவில் மக்களின் காணிகள் அவர்களிடமே வழங்கப்படும் என உறுதியளித்திருக்கிறார் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பலாலி இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள காணிகளை 25 வருடங்களாக முன்னைய அரசாங்கம் கொடுக்கவில்லை. ஆனால், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியேற்ற பின்னர் மீள்குடியேற்றம் சாத்தியப்பட்டது.

எதிர்வரும் காலத்திலும் தனியார் காணிகளை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது. அதற்கான முழு வேலைத் திட்டங்களும், வலி. வடக்கில் நடைபெற்று வருகின்றன. போர் முடிவுற்ற பின்னர், இராணுவத்தின்

06

# மாவீரர் நாளை அரசியல் ஆக்காதீர்

### புலிகளின் மூத்த உறுப்பினர் மனோகர் வேண்டுகோள்!

### மக்கள், அரசியல்வாதிகளிடம் ஐந்து கோரிக்கைகளும் முன்வைப்பு





யாழ்ப்பாணம், நவ 14

உணர்வும் மதிப்பும்மிக்க மாவீரர் நாள் நினைவேந்தலை எந்த விதத்திலும் தங்கள் தேவைக்கு அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் பயன்படுத்தக்கூடாது.

இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரும் முக்கியஸ்தரும் மாவீரர் அறிவிழியின் தந்தையுமான முத்துக்குமார் மனோகர் (பசீர் காக்கா).

நேற்று யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதன்போது அவர் மக்களிடமும் மாவீரர் நினைவுநாள் ஏற்பாட்டாளர்களிடமும், அரசியல்வாதிகளிடமும் 5 முக்கிய கோரிக்கைகளையும்

06

## பிரபாகரனுக்கு நிகரான தலைவர் சம்பந்தனாம்!

### அமைச்சர் விஜயகலா சொல்கிறார்



யாழ்ப்பாணம், நவ. 14

பிரபாகரனுக்கு நிகராக அனைவராலும் பேசப்படும் தலைவராக தற்போதைய காலகட்டத்தில் இரா.சம்பந்தன் திகழ்கிறார். கட்சிகளை உடைக்காது 2020 இற்குள் தீர்வைப் பெறுவதற்கான செயற்பாட்டை அவர் முன்னெடுக்க வேண்டும்.

இப்படிக் கூறியிருக்கிறார் மகளிர் விவகார இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

06

## ஆலயங்களில் வேள்வி தடை: ஆட்சேபித்து மேன்முறையீடு

யாழ்ப்பாணம், நவ.14

யாழ். மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் வேள்விக்கு விதிக்கப்பட்ட தடையை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. வேள்விக்கு பிரபலமான கவுணாவத்தை வைரவர் ஆலயமே இந்த மேன்முறையீட்டை செய்துள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மேல் முறையீடு செய்யப்படுவதற்கான மனு மற்றும் அறிவிப்பை சட்டத்தரணி வீ.கௌதமன் யாழ். மேல் நீதிமன்றில் நேற்று முன் வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் சில இந்து ஆலயங்களில் மிருகபலியிடல் வேள்வி நடத்தப்படுகின்றது. மக்களின்

06



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

உங்களின் வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# வவுனியாவில் பெரும்போகம்



வவுனியா,நவ.14
வவுனியா மாவட்டத்தில் 19ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பில் பெரும் போக நெல் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெரும்போகத்தில் நெல் உற்பத்திக்காக மழை பெய்ய ஆரம்பித்திருப்பதால் இரண்டு போகங்களுக்குப் பின்னர் நெல் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போதுமான மழைவீழ்ச்சி கிடைக்காததினால் இரண்டு போக உற்பத்தி நடவடிக்கைகள் வவுனியாவில் வெற்றியடையவில்லை. மழையின்மையின் காரணமாக வவுனியாவில் சுமார் 40 சதவீதமான நெற்காணிகளிலேயே உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 10 சதவீத அறுவடையே கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெற்றி நிச்சயம்

கொழும்பு,நவ.14
"எவர் விட்டுச் சென்றாலும் கவலையில்லை. சுதந்திரக் கட்சியிலிருந்து யார் விலகிச் சென்றாலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வெற்றியைத் தடுக்க எவராலும் முடியாது" என்று சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
கொழும்பு இரத்மலானையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து எவர் வேண்டுமானாலும் செல்லட்டும். ஆனால் சுதந்திரக் கட்சியை அவர்களால் வீழ்த்தி விட முடியாது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சியை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதற்கான சகல முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.
இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சுதந்திரக் கட்சி தேர்தலுக்கு முகம்கொடுக்க அச்சப்படுவதாகக் கூறியுள்ளார். யார் என்ன கூறினாலும் நாங்கள் தேர்தலில் வெற்றி பெறப்போவது நிச்சயம்" என்று அவர் கூறினார். (அ)

வருடந்தோறும்

# திடீர் அனர்த்தங்களால் 4 ஆயிரம் பேர் இறப்பு



கொழும்பு,நவ.14
"திடீர் அனர்த்தங்களினால் வருடந்தோறும் சுமார் 4ஆயிரம் பேர் இறக்கின்றனர். மேலும் பலர் பாதிக்கப்படுகின்றனர்" என்று தெரிவித்தார் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன.
கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் திடீர் விபத்து மற்றும் திடீர் சிகிச்சை மத்திய நிலையம் , தேசிய பக்கவாத மத்திய நிலையத்தையும் அமைப்பதற்கான கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.
சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
"தொற்றா நோய் சுகாதாரத்துறையிலுள்ள மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். திடீர் அனர்த்தங்களே தொற்றா நோய் ஏற்படுவதற்குக் காரணமாகும். திடீர் அனர்த்தங்களினால் வருடந்தோறும் சுமார் 4ஆயிரம் பேர் இறக்கின்றனர். மேலும் பலர் பாதிக்கப்படுகின்றனர்.
அனைத்து மாவட்டங்களிலும் அவரச சிகிச்சை போன்று விசேட சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்படும். நியூக்கேமியா என்ற இரத்தப் புற்றுநோய்க்கான சிகிச்சைப் பிரிவு மகரகம அபெக்ஸ்ஸா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தலசீமியா நோய் சிகிச்சைக்காக எலும்புமச்சை சிகிச்சை மத்திய நிலையம் ஒன்று, கண்டி பெரியாஸ்பத்திரியில் அமைக்கப்பட்டுள்ளது " என்று அமைச்சர் ராஜித இதன்போது தெரிவித்தார்.(அ)

## சிறுமி மீது துஷ்பிரயோகம்

பிணை நின்றவருக்கு சிறை

யாழ்ப்பாணம், நவ.14
16 வயதுக்குட்பட்ட தன் மகளைப் பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்திய சந்தேகநபர் தலைமறைவாகியதால் பிணை நின்றவர் சிறைக்குள் தள்ளப்பட்டார். அத்துடன் சந்தேகநபரைக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்தது.
இந்த வழக்கு விசாரணைக்கு வந்த நாளிலிருந்து சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்ய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஏற்கனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் எதிரியைப் பிணையில் வெளிக்கொண்டுவர ஆள் பிணை நின்றவருக்கும் மன்று அழைப்பாணை அனுப்பியிருந்தது.
இந்த நிலையில் வழக்கு இன்று விசாரணைக்கு வந்த போது, பிணையாளி மன்றில் முன்னிலையானார். அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி, சந்தேகநபரை அடுத்த தவணையில் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு கண்டிப்பான உத்தரவிட்டார். (அ)

# மூதூர் சிறுமிகள் துஷ்பிரயோகம்

## ஆறாம் சந்தேகநபருக்கு மறியல்

மூதூர், நவ.14
மூதூரில் மூன்று சிறுமிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 6 ஆவது சந்தேகநபருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிவான் றிஸ்வான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு தொடர்பில் ஆரம்பத்தில் ஆறு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஆளடையாள அணிவகுப்பில் பாதிக்கப்பட்ட சிறுமிகளால் குற்றவாளிகளை அடையாளம் காட்ட முடியவில்லை. இதனால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.
இந்நிலையில் சிறுமிகளின் உடலில் பெறப்பட்ட மரபணுக்களும் ஆறாவது சந்தேகநபரிடம் இருந்து பெறப்பட்ட மரபணுக்களும் ஒத்துப்போவதாக பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்தே ஆறாவது சந்தேகநபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
மூதூர் பெரியவெளி மல்லிகைதீவு கிராமத்தில் மே 28 ஆம் திகதி 3 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மழை குறையும்

கொழும்பு,நவ.14
நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை தற்காலிகமாக அடுத்த சில தினங்களில் குறைவடையும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
வடமாகாணத்தின் ஊடாகவும் மற்றும் தென்மாகாணத்தின் கடற்கரையோரங்களிலும் வலுவான காற்று வீசக்கூடும்.
வடக்கு , வடமேற்கு, மேற்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஓரளவு மழைபெய்யும்.மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில பகுதிகள் காலை வேளைகளில் பனிமூட்டத்துடன் கூடிய காலநிலை காணப்படும்.
காங்கேசன்துறையிலிருந்து முல்லைத்தீவு ஊடாகப் புத்தளம் வரையிலான கடற்கரைப்பகுதியில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கட்டடத் தொகுதி நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.14
யாழ். பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான கட்டடத் தொகுதி சீரமைக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் கட்டடத்தில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர் பிரிவுக் கட்டடத் தொகுதியே இவ்வாறு உயர் கல்வி அமைச்சின் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் சீரமைப்பு செய்யப்பட்டு, நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் இந்தக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தனர். நிகழ்வில் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# பெற்றோல் நெருக்கடி ஏன்? தீர்வு அறிக்கை இன்று



கொழும்பு,நவ.14
பெற்றோலுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலைக்குக் காரணமான விடயங்களைக் கண்டறிவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு தனது அறிக்கையைத் தயாரித்துள்ளது.
கண்டியில் செய்தியாளர் மத்தியில் உபகுழு அங்கத்தவர்களுக்கான தலைவரும் விசேட பணிப் பொறுப்புக்களுக்கான அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம இது தொடர்பில் தெரிவிக்கையில்,
"இப்போது பெற்றோலுக்கான நெருக்கடி எதுவுமில்லை. ஆயினும் சமீபத்தில் ஏற்பட்ட பெற்றோல் நெருக்கடி நிலைக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறியவே நாம் முயற்சிக்கின்றோம். இதனைக் கண்டறிந்து இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியிடம் இந்த அறிக்கையை சமர்ப்பிப்போம். இந்த அறிக்கையில் உண்மையான விடயங்களை மறைக்க முடியாது. அறிக்கை பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அறிக்கையைப் பூரணப்படுத்தி வெளியிடும் முன்னர் அதிலுள்ள விடயங்களைக் குறிப்பிடுவது முறையல்ல. ஆனாலும் நெருக்கடிக்கான காரணங்கள் அனைத்தையும் கண்டறிந்துள்ளோம் என்பதை மட்டும் சொல்ல முடியும்" என்றார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 14 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# இனியும் வாலாடக் கூடாது

"மாவீரர் நாள் நினைவேந்தலை, அரசியல் தேவைக்குப் பயன்படுத்தக் கூடாது. இம்முறை மாவீரர் நாளில் அரசியல்வாதிகள் சுடர் ஏற்றக் கூடாது, மாவீரர்களின் பெற்றோரோ, உறவுகளோ தான் சுடரேற்ற வேண்டும்"

என்று பொருத்தமான வேளையில், மௌனித் திருந்த வார்த்தைகளை தெறிக்க விட்டிருக்கிறார் காக்கா அண்ணா என்று அழைக்கப்படும், புலிகளின் மூத்த போராளியும், மாவீரரின் தந்தையுமான மனோகர். திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை போராளியாகப் பயணித்த காக்கா அண்ணாவுக்கு மேற்குறித்த வார்த்தைகளைச் சொல்ல முழுத் தகுதியும் உண்டு.

கடந்தவருடம் மாவீரர் நாளில் நடந்த கூத்துகளைப் பார்த்தவர்களுக்கும், இம்முறை கார்த்திகை பிறந்தவுடனேயே மாவீரர் துயிலுமில்லங்களைத் தேடத் தொடங்கிய அரசியல்வாதிகளை அவதானிப்போருக்கும் அடிமனதில் இருந்த ஆதங்கமே, காக்கா அண்ணாவின் வாயிலிருந்து புறப்பட்டிருக்கின்றன.

இப்போது மக்கள் பிரதிநிதிகளாக வலம் வருகின்ற எந்தவொரு அரசியல்வாதியும் மாவீரர்களுக்குச் சுடரேற்ற மட்டுமல்ல, துயிலுமில்லங்களுக்குள் காலடி எடுத்து வைப்பதற்குக் கூடத் தகுதியற்றவர்கள். தங்கள் சொகுசு வாழ்க்கையையும், பதவியையும் மட்டுமே கண்ணும் கருத்துமாகக் கவனித்தார்களே தவிர, மக்களுக்காக இவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்திருக்கவில்லை. அதிலும் போராட்டம் நிகழ்ந்த காலப்பகுதியில், அதனைக் கொச்சைப்படுத்துவதிலும், போரின் பிடியில் இருந்து தப்பித்தோடுவதிலுமே குறியாக இருந்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் இப்போது மக்களின் மீட்பர்கள் போல, வெள்ளையும் சொள்ளையுமாக வந்து , மாவீரர்கள் மண்ணுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் புனித மண்ணில், சுடரேற்றி அஞ்சலி செய்வதென்பது எவ்வளவு பெரிய அபத்தம்.

அதிலும் தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தங்கள் பிள்ளைகளையும், உறவுகளையும் களப்பலி கொடுத்துவிட்டு தாம் கண்ணீரோடு நிற்க, போராட்டத்துக்காக எதுவும் செய்யாமல் ஒளிந்திருந்துவிட்டு, இப்போது தாமே தலைவர்கள் என்ற திமிரோடு, சுடரேற்றும் அரசியல்வாதிகளை மாவீரர்களின் பெற்றோரும், உற்றோரும் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்?

அத்தோடு இன்னும் 3 மாதங்களில் உள்ளூராட்சித் தேர்தல் வேறு வரப்போகின்றது. சும்மாவே விலாசம் காட்டும் அரசியல்வாதிகள், தேர்தல் என்றால் சும்மாயிருப்பார்களா? வாக்குவேட்டைக்கு புலிகளின் வீரத்தையும், மாவீரர்களின் தியாகத்தையும் போல வேறு நல்ல முதலீடு கிடையாது. அதிலும் தேர்தல் நெருங்கும் சமயத்தில் மாவீரர் தினம் வருகையில், அந்தச் சந்தர்ப்பத்தை எந்த அரசியல்வாதியாவது கைவிட நினைப்பார்களா? ஆனால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் போல, ஒரு கட்சி காலையிலும் இன்னொரு கட்சி மாலையிலும் மாவீரர் நாளுக்குச் சுடரேற்றி அதன் புனிதத்தை சிதைக்கவும் கூடும். இப்படியான அரசியல்வாதிகளின் கைகளில் சிக்கி மாவீரர் நாள் சின்னாபின்னாப் படாமல் இருக்க, காக்கா அண்ணா கேட்டுக் கொண்டதைப் போல, "மாவீரர் துயிலுமில்லங்களில் அரசியல்வாதிகள் சுடரேற்றக் கூடாது. வேண்டுமானால் மாவீரர்களின் பெற்றோரும், உறவுகளும் மாவீரரை நினைவேந்த அரசியல் கட்சிகள் பின்பலமாக இருக்கலாம். பிள்ளைகளைப் போருக்கு அனுப்பி, மாவீரர்களாக அவர்களைக் கண்டவர்கள் எனும் தலைகள் இருக்கும் போது, அரசியல்வாதிகளெனும் வால்கள் ஆடக்கூடாது"

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# உறவுகளுக்காக அழுதது போதும்: உறுதியுடன் நிற்பதே தீர்வுக்கு வழி

## அமைச்சர் அனந்தி சசிதரன்



யாழ்ப்பாணம், நவ.14

எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்று எண்ணி எண்ணி அழுது புலம்பிய காலங்களைக் கடந்து விட்டோம். மாறாக உறுதியுடன் நிற்பதே தீர்விற்கான ஒரே வழி.

நீதி கேட்டுப் போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு இவ்வாறு ஆறுதலும் உற்சாகமும் வழங்கியிருக்கிறார் வட மாகாண மகளிர், புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன்.

இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் எனக்கோரி, அவர்களின் உறவுகள் 250 நாட்களைக் கடந்து போராடி வருகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக 251 ஆவது நாளாகப் போராடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் அனந்தி சசிதரன் சந்தித்துப் பேசினார்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்று எண்ணி எண்ணி அழுது புலம்பிய காலங்களைக் கடந்துவிட்டோம். இனியும் அழுது புலம்பிப் பயனில்லை. எமக்கான நீதியை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் நாம் எமது கோரிக்கையில் உறுதியாக நிற்பது அவசியம். அதன்மூலமே அனைத்துப் பிரச்சினைக்கும் நீதியான தீர்வைப் பெற முடியும்.

இறந்து விட்டார்கள் என்றால் அதனால் மனதில் ஏற்படும் துக்கம் காலப் போக்கில் ஆறிவிடும். ஆனால் இருக்கிறார்களோ இல்லையோ என்பது கூடத் தெரியாது நாம் படும் துயரம் கறையான் அரித்தது போன்று பெரும் மனவேதனையை தந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினையால் நானும் பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் உங்கள் வலிகளையும் வேதனைகளையும் என்னால் முழுமையாக உணர்ந்துகொள்ள முடிகிறது.

எமது கோரிக்கைகளை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் சர்வதேசம் மற்றும் அரச தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் சமரசங்களை ஏற்காது நாம் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதன் மூலமே எமது பிரச்சினைகள் குறித்து பேசியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளோம். இல்லையென்றால் எமது விடயம் எப்போதோ கைகழுவி விடப்பட்டிருக்கும் என இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்தவின் பிரதானிக்கு நேற்று விளக்கமறியல்

கொழும்பு, நவ.14

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காரியாலய பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட மூன்று பேர் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு - கோட்டை பிரதான நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரட்னவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மூவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு தாம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக காமினி செனரத் அண்மையில் உயர் நீதிமன்றில் தெரிவித்தார். தம்மை நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் கைது செய்யாதிருக்க உத்தரவிட வேண்டும் என அவர் தாக்கல் செய்த மனு அண்மையில் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(அ)

# ஆண் நண்பரை தாக்கிவிட்டு யுவதி மீது கூட்டு வன்புணர்வு

ஆண் நண்பரைத் தாக்கி விட்டு, 17 வயது பெண்ணை ஐவர் கூட்டு வன்புணர்வு செய்துள்ளனர். சந்தேகநபர்களான ஐவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் மகியங்கனை தியபானாகுள பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் அறியவருவதாவது:

மேலதிக வகுப்புக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு தியபானகுள வனப்பகுதிக்கு யுவதி தனது ஆண் நண்பருடன் சென்று தனிமையில் இருந்துள்ளார்.

அச்சமயம் அங்கு சென்ற ஐந்து இளைஞர்கள் ஆண் நண்பரைத் தாக்கி விட்டு யுவதியைக் கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

ஆண் நண்பர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார், யுவதியை மகியங்கனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். சந்தேகநபர்கள் ஐவரும் 17 தொடக்கம் 25 வயதுடையவர்கள் என்று தெரியவருகின்றது.

# கஞ்சா ஆசிரியர் மஹரகமவில் கைது

யாழ்ப்பாணம், நவ.14

க.பொ.த சாதாரண மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளை நடத்தி வரும் ஆசிரியர் ஒருவர் மாணவர்களுடன் கஞ்சா புகைத்துக்கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹரகம பகுதியில் இயங்கி வரும் இரு பிரபல பாடசாலை மாணவர்களுடன் 25 வயதுடைய ஆசிரியரே இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளார்.

அத்துடன் அவர்கள் வசமிருந்த கஞ்சாப் பொதிகள் ஒன்பதும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின்மூலம் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர் உள்ளிட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது ஆசிரியருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் குறித்து எதிர்வரும் 24 ஆம் திகதி நன்னடத்தை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(அ)

# நியமனங்கள் வழங்குமாறு கோரி பட்டதாரிகள் நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், நவ.14

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் ஒன்றை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு முன்னெடுக்கவுள்ளனர்.

'வேலையற்ற பட்டதாரிகள் சகலருக்கும் நியமனங்கள் வழங்க வேண்டும்" எனக் கோரியே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது என வட மாகாண பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், 143 நாள்கள் தொடர்ச்சியாக போராட்டத்தை நடத்தியபோது பட்டதாரிகளை பயிற்சி அடிப்படையில் அபிவிருத்தி உதவியாளராக இந்த ஆண்டுக்குள் நியமிப்பதாக உறுதி அளிக்கப்பட்டது. இதையடுத்து எமது போராட்டம் கைவிடப்பட்டது. ஆனால் நியமனங்களை வழங்க இதுவரை எந்த செயற்பாடும் நடக்கவில்லை. இதைக் கண்டித்தே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

போராட்டத்துக்கு வருகை தந்த பட்டதாரிகளின் கையெழுத்துக்கள் உள்ளடங்கிய மகஜர், முதலமைச்சர், ஆளுநர், அரசாங்க அதிபர் ஆகியோருடாக பிரதமருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. எனவே அனைத்துப் பட்டதாரிகளையும் போராட்டத்துக்கு வருகை தருமாறு வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள்சங்கம் கேட்டுள்ளது.

## இன்று நாளும் கோளும்

14.11.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 28 ஆம் நாள்

ஏகாதசி பி.ப. 03.22 மணி வரை | உத்தரம் பி.ப. 03.37 மணி வரை | சித்தயோகம்
இராகுகாலம் 03.00 – 04.30 | சுபநேரம் 04.45 – 05.45 | எமகண்டம் 09.00 – 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மை | திறமை | சோர்வு | கவனம் | சாந்தம் | அமைதி | சுகம் | நலம் | புகழ் | பயம் | பக்தி | பொறுமை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்.வீதியைப் பாழாக்கலாமா?

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ஸ்ரான்லி வீதியையும் நாவலர் வீதியையும் இணைக்கும் யாழ். வீதி நீண்ட காலமாக சீரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியாக இருக்கும் யாழ். வீதி சீரமைக்கப்படாத நிலையில் உள்ளதுடன் குப்பை கூழங்களினாலும் விலங்குகளின் கழிவுகளினாலும் நிரம்பி வழிகின்றது. அண்மையில் பெய்த மழை காரணமாக மழை நீர் தேங்கி, போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அசௌரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலை தொடர்பில் அப்பகுதி மக்களால் யாழ்.மாநகர சபை நிர்வாகத்துக்கு பல தடவைகள் முறையிடப்பட்டுள்ளது. எனினும் குப்பை கூழங்களை அகற்றி சுகாதார நிலமைகளை கருத்தில் கொள்வதில் அதிகாரிகள் அசட்டையாக உள்ளனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் சுகாதார திணைக்களத்தினரும் பொது மக்கள் நலன் கருதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மழை நீர் வழிந்தோடும் வாய்கால் நீண்ட காலமாகச் சீரமைப்படவில்லை. அதனை சீர் செய்யும் பணி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் மழை நீரின் தேக்கமும் குப்பை கூழங்கள் அழுகி துர்நாற்றம் வீசும் நிலையும் மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது.

வீடுகளில் மக்களிடம் தண்டப் பணம் அறவிடும் டெங்கு ஒழிப்பு குழுவினரின் கண்களுக்கும் மாநகர சபை அதிகரிகளுக்கும் இந்த விடயம் தென்படவில்லையா என மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (அ)



## பென்ஷன் பாட்டியளுக்குப் போட மாட்டம்!

நம்பிக்கை எண்டது ஒரு மனுசனுக்கு முக்கியம் கண்டியளோ. அது இல்லாமல் போட்டுதெண்டால் பிறகு தூக்கி நிமித்திறது வலு கஷ்டம் பாருங்கோ. ஆனால் அது மாதிரி இல்லாததொண்டை இருக்கிறதா நினைக்கிறதும் வலு டேஞ்சர் தெரியுமோ?

இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம், ஆயிரம் தாள் ஒண்டைக் கொட்டப் பெட்டிக்கை வைச்சிருந்தனான். கோயிலடியிலை வைச்சு பரமனாதி " ஒரு தவசன் எடுக்கலமோ அண்ணை? ஒரு கிழமையிலை தரலாம் எண்டு கேட்டான்.. அவன் உப்பிடி முன்னமும் வாங்கி ஒழுங்காத் தந்தவன். அதோடை கோயில் வாசலிலை நிண்டபடி கேக்கிறான். அங்கை பிள்ளையாரும் பாத்துக் கொண்டு இருக்கிறார். இல்லையெண்டு சொல்லவும் மனமில்லை. தூக்கிக் குடுத்திட்டன்.

பிறகு ஒரு நாலைஞ்சு நாளைக்குப் பிறகு யாழ்ப்பாணம் பெரிய கடைக்குப் போனனான் மருந்துச் சாமான் வாங்க. ஜெண்டில்மன் மாதிரி கட..கட வெண்டு சாமானைச் சொல்ல முதலாளி போட்டிட்டார். பில்லை வாங்கிக் கொண்டு கொட்டைப் பெட்டியைத் துறந்தால்.... மானங் கெட்டுப் போச்சுது. பரமனாதிக்குக் கைமாற்றுக் குடுத்தது மறந்து போச்சு. நான் வழமையா அங்கை சாமான் வாங்கிற ஆள் எண்டபடியால் கடனைச் சொல்லிப் போட்டு சாமானைக் கொண்டு வந்திட்டன்.

அப்ப இருக்கிறதை இல்லை எண்டு நம்பிறதும் பிரச்சினை, இல்லாததை இருக்கெண்டு நம்பிறதும் பிரச்சினை எண்டு இப்ப தெரியுதோ?

அது போலைத்தான் உந்த கூட்டமைப்புக் காறரும். உவையும் ஆக்களைக் கண்டபடி நம்பிறமாதிரிக் கிடக்கு. உண்மையாதான் தெரியாத்தனத்திலை நம்பினமோ, இல்லாட்டி நடிக்கினமோ எண்டு தெரியேல்லை. ஆனால் அவையும் பிசகாக்கிடக்கு. சனத்தைப் போட்டுச் சிப்பிலி ஆட்டினம்.

மன்னார் ஆயர் உவை எல்லாரையும் கூப்பிட்டுக் கதைச்சவராம். ஒண்டும் சரிவருகிற மாதிரித் தெரியேல்லை எண்டு அந்தாளும் கைவிட்ட மாதிரிக் கிடக்கு. சுரேஸும் இறங்கி வார மாதிரித் தெரியேல்லை. அதுக்கை " தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு புதிய முன்னணி ஒன்று தேவை. அது விரைவில் தோற்றுவிக்கப் படும்" எண்டு அதாவது எக்ஸ்பிரஸாகவும் , ஏர்ஜன்டாவும் தோற்றுவிக்கப்படும் எண்டு அவர் சொல்லி இருக்கிறார். வலு வில்லங்கமான விசியம்.

பிறகு பொன்னம்பலத்தாற்றைப் பேரன் "தமிழ் மக்கள் பேரவையின் பங்களிப்புடன் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் புதிய கூட்டணி ஒண்டு களமிறங்கும்" எண்டு சூழுரைக்கிறார். தங்களோடை கனபேர் வருகினம் எண்டும் சொல்லுறார். அது உண்மையாயிருக்கும். ஏனெண்டால் அந்தப் பெடி பொய் சொல்லுறது குறைவெண்டு கேள்விப்பட்டனான்.

இதுக்கை சீ.எம் ஒருக்காச் சொல்லுறார் கூட்டமைப்பை உடைக்கப்படாது. ஒற்றுமையாப் போவமெண்டு. பிறகு முந்த நாள் நடந்த கூட்டத்துக்குப் பிறகு "தமிழ் மக்கள் எதிர்கால நலனுக்காக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையை எந்த வகையிலும் அரசியல் கட்சியாக மாற்றப்படாது. அரசியல் நடவடிக்கைகளின்போது பேரவை என்ற வகையில் தலைமீடுகள் மேற்கொள்ளப்படும்" எண்டு சொல்லுறார்.

பிறகு பேப்பர் செய்தி ஒண்டு – தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சியாகப் பதிவு செய்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதா? அல்லது புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துத் தேர்தலில் போட்டியிடுவதா? என்று இங்கு விரிவாக ஆராயப்பட்டது – எண்டு சொல்லுது. இப்பிடி ஆராயப்பட்ட நேரம் சீ.எம் எங்கை போனவர் எண்டு பேப்பர் வாசிக்கேக்கை முதலியும் கேட்டவன்.

இதெல்லாத்தையும் பாத்தும் கேட்ட பிறகு றோட்டிலை நிண்ட இளம் பெடியள் கொஞ்சப்பேரைப் பாத்து "வார எலக்க்ஷனிலை ஆருக்கெடா மக்கள் போடுவியள்" எண்டு கேட்டன். நிச்சியமாப் பென்ஷன் பாட்டியளுக்குப் போடமாட்டம் எண்டாங்கள்.

விநாசிக்கு வில்லங்கம் துவங்கிவிட்டுது. தலை இடி..இடி எண்டு இடிக்கிது. பென்ஷன் பாட்டி எண்டு உவங்கள் ஆரைச் சொல்லியிருப்பங்கள்?

- வில்லங்கம் விநாசி

## வாயை அடைக்கும் வரவு– செலவுத் திட்டம்



கொழும்பு,நவ.14

"2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், எங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் எதிரணியின் வாயை அடைக்கும்" என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார். இறம்பொட ஸ்ரீ கல்கி மாணவர் சேவா அமைப்பு ஒழுங்கு செய்திருந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இறம்பொட தொண்டமான் கலாசார மண்டபத்தில் நேற்றுத் திங்கட்கிழமை அமைச்சர் மனோ கணேசனின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

## பரீட்சைத் திணைக்களத்தில் வருகிறது அதிரடி மாற்றம்

கொழும்பு,நவ.14

பரீட்சைத் திணைக்களத்தில் பல அதிரடியான மாற்றங்களைக் கொண்டுவரவுள்ளதாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியவில் ஊடகவியலாளர்கள் மத்தியில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர், "பரீட்சைத் திணைக்களத்தின் மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் . பரீட்சைத் திணைக்களத்தின் இரகசியம் மற்றும் நிறுவகத்தின் பரீட்சைப் பிரிவின் பிரதம அதிகாரியாக செயற்பட்ட பிரதி பரீட்சைகள் ஆணையாளரைச் சேவையில் இருந்து இடைநிறுத்துவதற்கு சமீபத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர் தன் கடமையில் இருந்து தவறியதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் பரீட்சைத் திணைக்களத்தின் செயற்பாடுகள் நம்பிக்கையானதாகவும், துரிதமானதாகவும் அமைய பல மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளேன்" என்றார் . (அ)

## மாணவிக்கு உதவினார் மாகாணசபை உறுப்பினர்

வடமராட்சி, நவ.14

முதலமைச்சரிடம் பரிசு பெற வந்தபோது, திருடர்களிடம் தனது துவிச்சக்கர வண்டியை பறிகொடுத்த பாடசாலை மாணவிக்கு புதிய துவிச்சக்கர வண்டி ஒன்றை வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து நேற்று வழங்கி வைத்தார்.



நெல்லியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வார நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பரிசில் பெற்ற சின்னதம்பி வித்தியாலய மாணவி முருகானந்தம் சியாமினி என்பவரின் துவிச்சக்கர வண்டியைத் திருடர்கள் களவாடிச் சென்றிருந்தனர்.

ஐந்து அங்கத்தவர்களை கொண்ட மாணவியின் குடும்பம் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டது. அந்த மாணவிக்கு புதிய துவிச்சக்கர வண்டியை வாங்கிக் கொடுக்கக் கூடியநிலையில் அந்த மாணவியின் குடும்பம் இல்லை என பாடசாலை அதிபர் மற்றும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலர் ஆகியோர் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து அந்த மாணவிக்கு மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் துவிச்சக்கர வண்டியை வழங்கி வைத்தார். இதேவேளை அண்மையில் ஊடகவியலாளர் ஒருவரின் துவிச்சக்கர வண்டியும் களவாடப்பட்ட போது, அவருக்கும் புதிய துவிச்சக்கர வண்டியினை மாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தங்காலைச் சிறைக்கு ஞாயிறோடு மூடுவிழா

கொழும்பு, நவ.14

தங்காலைச் சிறைச்சாலை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டு, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் புதிய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நிஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். தங்காலைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 350 க்கும் அதிகமான கைதிகள் அங்குனுகொலபெலஸயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நிஷான் ரணசிங்க கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன டிஜிட்டல் முறையில் தேவைக்கேற்ற சேவைகளை வழங்கும் SLT Rainbow Pages

வணிக எதிரொலி

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனமானது, 160 ஆண்டுகளாக இலங்கையில் தொடர்பாடல் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தொடர்ந்தும் முன்னோடியாகச் செயற்பட்டதொரு தொடர்பாடல் நிறுவனமாகும்.

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் கூட்டு நிறுவனத்தின் இணை நிறுவனமான SLT Rainbow Pages இலங்கையின் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரே தொலைபேசி விபரக் கொத்தை வெளியிட்டு, பொருட்கள் மற்றும் சேவைகள் வசதியை பெறும் எதிர்பார்ப்புடன் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மிக எளிதில் தகவல்களை வழங்கும் பிரதான தொடர்பாடல் நிறுவனமாகும். சுமார் 1.5 மில்லியன்களுக்கு மேற்பட்ட ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிலையானதொலைபேசி இணைப்புகளினதும் இலங்கையின் மொத்த சனத்தொகையான 22 மில்லியன்களை விஞ்சும் வகையிலான கையடக்கத் தொலைபேசி இணைப்புகளினதும் அத்தியாவசியத் தொலைபேசி இலக்கங்களை ஒரே விபரக்கொத்தில் பிரசுரிக்கும் எதிர்கால நோக்கத்தை அடையும் பொருட்டு செயற்பட்டு வருகின்ற SLT Rainbow Pages நிறுவனமானது, இன்றளவில் அச்சு விபரக் கொத்தைத் தாண்டி, நவீன தொழில் நுட்ப சாதனங்கைளயும் பின் தள்ளி கையடக்கத்தொலைபேசி அப் (App) உள்ளிட்ட அதி நவீன டிஜிட்டல் அணுகுமுறைகள் ஊடாக தகவல்களை வழங்கும் பணியை மேற்கொள்கிறது. இலங்கையின் ஒரே தேசிய தொழில் துறை விபரக் கொத்தாக தொழில் முயற்சிகளையும் அரச நிறுவனங்களையும் இணைக்கும் வகையில் மேற்கொள்கின்ற தேசியப் பணிக்கு சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழில்களையும் இணைத்துக் கொள்வதற்கு பல்வேறு துறை சார்ந்த விபரக் கொத்துகளை வெளியிடும்பணியையும் SLT Rainbow Pages நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அத்தோடு நின்றுவிடாது அன்றாடச் சம்பளத்துக்குச் சேவைகளை வழங்கும் நிபுணத்துவத்துடன் கூடிய தொழிலாளர்களையும் இணைத்துக் கொண்டு பரந்துபட்ட தேசியப் பணியொன்றை ஆரம்பிக்கும் வகையிலான புதிய கருத்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கும் SLT Rainbow Pages நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அரச கொள்கையின் பிரகாரம் டிஜிட்டல் நிறுவனமொன்றை நோக்கிய பயணத்துக்கு அடியெடுத்து வைத்துள்ள இலங்கை அரசாங்கத்தின் தொடர்பாடல் கொள்கையை ஊக்குவிக்கும் வகையில் அன்றாட சேவைகளை வழங்கி தமது பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தொழிலாலர்கள் உள்ளிட்ட நாடெங்கிலும் உள்ள சகல சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும் அதிக வருமானத்தை ஈட்டித் தருவதும் சேவைகளைப் பெறுக் கொள்வதற்கும் வசதி செய்து கொடுப்பதுமே இவ் வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

நீர்க் குழாய் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள், மின் தொழில்நுட்பவியலாளர்கள் உள்ளிட்ட தினக் கூலியைப் பெற்றுக் கொண்டு சேவையினை வழங்குகின்ற சமூகத்தின் ஆரம்ப நிலை தொழிலாளர்கள் தொடக்கம் பாரிய அளவிலான சேவையினை வழங்கும் நிறுவனங்கள் வரையான சகல தகவல்களும் இக் கருத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்படுகின்றது.


உதாரணமாகச் சொன்னால், உங்கள் இல்லத்திலோ அல்லது நிறுவனத்தில் நீர்க் கசிவொன்று ஏற்படும் பட்சத்திலோ , அறிமுகப்படுத்தப்படவுள்ள 24 மணித்தியாலங்களும் இயங்கும் இச் சேவையுடன் நீங்கள் தொடர்பு கொள்ளமுடியும். அதைத் தொடர்ந்து உங்களின் பிரதேசத்துக்கு அண்மித்த நீர்க் குழாய் பொருத்தும் தொழிலாளர்களின் இலக்கங்கள் குறுஞ்செய்தியொன்றின் ஊடாக உடனடியாக உங்களுக்கு அறியத்தரப்படும். அதைத் தொடர்ந்து குறித்த இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் மிக இலகுவாகவும் நம்பிக்கையுடனும் உங்களுக்கு தேவையான சேவையை பெற்றுக் கொள்ளமுடியும்.

அவர்களுக்கு கிடைக்கும் சேவை வாய்ப்புக்களுக்கோ எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதோடு , தகவல்களைப் பெறுவதற்கு பின்வரும் படிநிலைகளைப் பின்பற்ற முடியும்.

தொழில்முயற்சியின் பெயர் அல்லது தொழில் சார் நபருடைய பெயர், தொழில் முயற்சியின் இயல்பு, விலாசம் மற்றும் SMS அனுப்பக்கூடிய இலக்கமொன்றைக் குறிப்பிட்டு தான் விரும்பிய மொழியில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1. தபால் பெட்டி இல 2233 , கொழும்பு என்ற விலாசத்துக்கு தபால் அட்டையொன்றை அனுப்புதல்
2. rainbowpages.lk இணையத்தளத்துக்கு பிரவேசித்து "add your business" ஊடாக தகவல்களை வழங்குதல்
3. info@rainbowpages.lk மின்னஞ்சல் முகவரிக்கு தகவல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்
4. 0712399399 இலக்கத்துக்கு குறுந்தகவலொன்றை அல்லது viber/ whatsapp ஊடாகவும் செய்தியனுப்புதல்.
5. 0112391888 இலக்கத்துக்கு தகவல்களை எழுதி அனுப்புதல்.

## அந்த நாள் ஞாபகம்.....!



**1971.11.14**

மரைனர் 9 செவ்வாய் கோளைச் சென்றடைந்தது. இதுவே பூமியில் இருந்து வேறொரு கோளின் செயற்கைச் செய்மதியாகச் செயற்பட்ட முதலாவது விண்கலமாகும்.

## புலமைப்பரிசில் கௌரவிப்பு நிகழ்வு



கொழும்பு,நவ.14

2017 புலமைப்பரிசில் வழங்கல்' என்ற பெயரில் புலமைப்பரிசிலில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியெய்திய மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் குளியாப்பிட்டிய அஸ்செட்டும சுபாரதி வித்தியாலயத்தில் இந்தக் கௌரவிப்பு நடைபெற்றது. இதில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அமைச்சர் பரிசில்களையும் விருதுகளையும் வழங்கினார். (அ)

# வாழ்க்கையில் சுறுசுறுப்பாக இருக்க RALEIGH சைக்கிள்களை வழங்குகிறது அபான்ஸ்

இலங்கையில் அனேகமான பிரதேசங்கள் நகரமயமாக்கப்பட்டதன் பின்னர் மக்களின் வாழ்க்கையில் ஓய்வில்லாது பணிச்சுமை அதிகரித்து காணப்படுகின்றது. இதன் காரணமாக எந்த ஒரு நபருக்கும் தனது ஆரோக்கிய நிலைமையை பராமரித்துக் கொள்ளவதற்கான கால நேரம் மிகவும் அரிதாகவே உள்ளது. இதன் காரணமாக அனேகர்களுக்கு இதனால் உடற் பருமன் அதிகரித்து நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் உள்ளிட்ட இன்னும் பல நோய்களினால் அவஸ்தைப்பட்டு வருகின்றனர். நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 30 நிமிடங்கள் சைக்கிள் ஓட்டுவதால் தேவையற்ற நோய்களில் இருந்து உங்களை பாதுகாத்து உங்களுக்கு ஆரோக்கியமான உடலமைப்பை பெற்று உங்கள்தேக ஆரோக்கியத்தை சீராக பேணுவதற்கு மிகவும் உறுதுணையாக அமைகின்றது.



அதிக ஆற்றல் மற்றும் நீடித்த உழைப்புடன் கவர்ச்சிகரமான தோற்றைத்தைக் கொண்ட RALEIGH 100 வருடங்களுக்கு மேலானதொரு காலம் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற ஒரு விற்பனை நாமமாக அனைவர் மனதிலும் இடம்பிடித்துள்ளது. கரடு முரடான எந்தவொரு பாதையமைப்பிற்கும் மிகவும் சிறந்த முறையில் ஒத்துழைக்கும் வகையில் சகல ஓட்டுநர்களுக்கும், மேட்டு நிலங்களில் மற்றும் பள்ளங்களில் RALEIGH சைக்கிள்கள் மிகவும் அடக்கமான மற்றும் எளிமையான முறையில் பயன்படுத்த முடியும். அதேபோல் இந்த சைக்கிள் துரு பிடிக்காது அதனால் இச்சைக்கிளில் அரிப்பு ஏற்படாது. அதேபோல் இது மிகவும் வலுமிக்கதாக இருப்பதால் ஏற்படக்கூடிய ஆபாயங்கள் குறைவு. இந்த வண்டிகளில் வேறு விதமான எந்தவொரு உற்பத்திப் பிழைகளும் இல்லாத காரணத்தினால் சைக்கிள் தொடர்பாக சிந்திக்கத் தேவையில்லை, நீங்கள் உங்கள் பயணங்களை மிகவும் இலகுவாகவும், திருப்த்திகரமாகவும் செல்ல முடியும்.

RALEIGH சைக்கிள்கள் கவர்ச்சிகரமான தோற்றத்துடன் சுலபமாக ஓட்டிச்செல்லக்கூடிய பல நவீன சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. RALEIGH MTB ஆண்களுக்கான வண்டிகளின் வேகம் 24 Shimano கியர் அமைப்பு மற்றும் அலோய் டபல்ட் டிஸ்க் பிரேக் அமைப்பு உள்ளதோடு, நீண்ட தூரம் ஓட்டிச் செல்வதற்கு மற்றும் சுறுசுறுப்பாக உடற் பயிற்சிகளை மேற்கொள்ளவதற்கும் மிகவும் உறுதுணையாக அமைகின்றது.

பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இருபாலருக்கும் பொருந்தும் வகையில் ஸ்டீல் போல்டிங்ஸ் சைக்கிள்கள், விளையாட்டுக்கு மிகவும் பொருத்தமான பழுப்பு மற்றும் வெள்ளை வர்ணங்களில் பெற்றுக்கொள்ள முடியும். இது 6 Shimano வேகத்திலான கியர் அமைப்பு மற்றும் அலோய் வீல் பிரேக் அமைப்புகளைக் கொண்டுள்ளதால் வீதியில் அதிக சொகுசுடனும், சௌகரியமாகவும் ஓட்டிச்செல்ல முடியும். அதேபோல் இந்த சைக்கிள்களை வலைக்கும் தன்மையுள்ளதால் உங்கள் வாகனத்தின் டிக்கியில் போட்டு அல்லது அதில் கட்டி நீங்கள் போகும் இடத்திற்கு மிகவும் இலகுவாக எடுத்துச்செல்ல முடியும். RALEIGH சைக்கிள்களுக்கு இலங்கையில் ஒரேயொரு ஏகமுகவர் அபான்ஸ் நிறுவனமாகும். இன்றே உங்கள் அருகில் உள்ள அபான்ஸ் எலைட் காட்சியறைக்கு சென்று உங்கள் விருப்பமான RALEIGH வண்டியை தெரிவுசெய்து உங்கள் தேகாரோக்கியத்தை ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் பேணுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரிகள் மூவருக்கு 5,500 ரூபா அபராதம்

வடமராட்சி, நவ.14

சுகாதார விதிகளை மீறிய உடுப்பிட்டியைச் சேர்ந்த வியாபாரிகள் மூவருக்கு 5 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி சுகாதார உத்தியோகத்தர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனை இதன்போது பழுதடைந்த பழங்களை விற்ப னைக்கு வைதிருந்த பழக்கடை வியாபா ரிக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேபோன்று முச்சக்கர வண்டியில் உண வுப் பண்டங்களை உரிய முறையில் எடுத்துச் செல்லாதவருக்கு 2 ஆயிரம் ரூபாவும், ஒழுங் கற்ற விதத்தில் நடத்தப்பட்ட உணவகம் ஒன் றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றால் விதிக் கப்பட்டன. (ச -11)

# கரவெட்டிப் பிரதேசத்தில் 15 பேருக்கு டெங்கு

வடமராட்சி, நவ.14

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த இரு வாரங்களில் 15 டெங்கு நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர் என வைத்திய அதிகார் சுதோக்குமார் தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கால்வாய்கள் துப்புரவு செய்யப்படாமை, பொதுமக்களின் காணிகளில் பற்றை படர்ந்துள்ளமை, வளவுகளிலும், வீதிகளிலும் கழிவுப் பொருட்களை போடுதல், இதனால் டெங்கு நுளம்பு பெருகும் சூழலை வைத்துள்ளனர்.

இதன் காரணமாகவே டெங்கு நோய் தாக்கம் தீவிரமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் காணிகளையும் பொது இடங்களையும் துப்புரவு செய்து டெங்கு நோய் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் அவர் மக்களை அறிவுறுத்தியுள்ளார். (ச -11)




# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். வணிகர் கழகம் உதவி



யாழ்ப்பாணம், நவ.14

யாழ். நகரை அண்டிய பொம்மை வெளி, வசந்தபுரம், நித்தியஔி, சாபிநகரம் கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். வணி கர் கழகம் உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழை யால் அப்பகுதிகளில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர்.

பொது இடங்களில் தஞ்சமடைந்த அப்பகுதி மக்களுக்கு நேற்றைய தினம் யாழ். வணிகர் கழத் தலைவரும் வட மாகாண சபை உறுப்பினருமான இ.ஜெய சேகரம் 5 நாட்களுக்குப் போதுமான உலர் உணவுப் பொருட்களை வழங் கினார். (ச)

# இனப்பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் ஒன்றுபடுங்கள்

கொழும்பு, நவ.14

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டியது அவசியம் என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் நாடாளுமன்ற சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் நேற்று மூன்றாவது நாளாகவும் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

விவாதத்தை ஆரம்பித்து வைத்தபோதே அமைச்சர் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பல தசாப்தங்களாக வீழ்ச்சியடைந்திருந்த அரச வருமானம் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அதிகரித்துள்ளது. சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் மேலதிக நிதியைக் கொண்டிருந்த நாடு இன்று 700 கோடி ரூபாய் கடன் சுமைக்கு ஆளாகியுள்ளது. இதற்கு ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும்..

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளை அபிவிருத்தி செய்ய 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், உயர் கல்விக்காக கூடுதல் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் புதிதாக ஏழு பீடங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 30 வருட யுத்தம் காரணமாக இலங்கைக்கு 400 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் 200 பில்லியன் டொலர்களையும் விடுதலைப் புலிகளும் அதே அளவான தொகையை யுத்தத்துக்காக செலவு செய்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். யுத்தத்தால் இடம்பெற்ற இழப்பை இலங்கை இன்னும் கணக்கிடவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் இந்த இழப்பை பற்றி சிந்தித்தாவது மீண்டுமொரு யுத்தம் ஏற்படாமல் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென குறிப்பிட்டார்.

## தொடர்ச்சிகள்

### ஆலயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை சடங்காக இருக்கும் இந்த வேள்வி இந்து மதத்தின் சம்பிரதாயங் களுக்கு எதிரானது எனத் தெரிவித்த சைவ மகா சபை யாழ். மேல் நீதிமன்றில் தடையீட்டு நீதிப் பேராணை மனுவை தாக்கல் செய்தது.

இந்த மனுவை சட்டத்தரணி வி.மணி வண்ணன் 2016 ஏப்ரல் 2ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார். அன்றிலிருந்து, வேள்விக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. கடந்த ஒக்ரோபர் மாதம் யாழ். மேல் நீதிமன்ற நீதபதி மா. இளஞ்செழியன் யாழ் மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் வேள்விக்கு தடை விதிப்பதாகத் தீர்ப்பு வழங்கினார். இதனை ஆட்சேபித்தே கவுணாவத்தை வைரவர் ஆலயத்தினர் இப் போது மேன்முறையீடு செய்துள்ளனர்.

### பலாலி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள் பலாலியில் களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை வேறிடத்துக்கு கொண்டு செல்லும் வேலைகள் நடக்கின்றன. விரைவில் மக்களின் காணிகள் அவர்க ளிடமே வழங்கப்படும்.

காரைநகரில் 50 ஏக்கர் காணிகளை மேலதிகமாக கடற்படை சுவீகரித்துள்ளது. அந்த காணிகளில் வீடமைத்து கொடுப்ப தற்காக என 12 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அறிக்கை கடற்படை அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரிரு கிழமைக்குள் அதற்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும்.

- என்று மேலும் அவர் தெரிவித்தார்.

### அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அரசியல் கைதிகளின் கோரிக் கையை நிறைவேற்றல், விடுதலையை விரைவுபடுத்தல் குறித்து அதிகாரத்தில் உள்ளவர்கள் மாணவர்களுக்கு வாக்கு றுதிகளை வழங்கியபோதும் அவை அனைத்தும் பொய்த்துப் போயின. இந்நிலையிலேயே அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டங்களை தாம் நடத்தவுள்ளார் என மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

### பிரபாகரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'கூட்டமைப்பில் இருந்து சிலர் வெளியேறி மாற்றுக்கட்சி உருவாவதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக் குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

தற்போது பிரபாகரனுக்கு நிகராக அனைவராலும் பேசப்படும் தலைவராக சம்பந்தன் திகழ்கிறார். கட்சிகளை உடைக்காது 2020 இற்குள் தீர்வைப் பெறுவதற்கான செயற்பாட்டை அவர் முன்னெடுக்க வேண்டும்.

தமிழீழம் கோரிப் போராடிய இளை ஞர்கள் போராட்டம் நிராகரிக் கப்பட்டுள்ளது. எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற நிலை உள்ளது. பிரபாகரன் இறந்துவிட் டார் என்பதற்கான மரண சான்றிதழை அரசாங்கம் வழங்கவில்லை. மரண சான்றி தழ் வழங்கினாலே அவர் இறந்ததை உறுதிப் படுத்தலாம்.

யுத்தம் முடிந்த நிலையில், இன்று எமது தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனே. புலம் பெயர் நாடுகளின் மக்களின் தலைவரா கவும் உருவாகியுள்ளார். தமிழ் மக்களின் தனித் தீர்விற்காக அரசாங்கத்துடன் விட்டுக் கொடுத்து வருகிறார். இனி ஒரு தலைவரை இங்கு எதிர்பார்க்கவில்லை.

### மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்தார். பிரதான சுடரை மாவீரர் ஒருவரின் கணவரோ, பெற்றோரோ அல்லது பிள்ளைகளோ மட்டுமே ஏற்ற வேண்டும்.

சமரசம் உலாவிய இடமாக துயிலுமில்லங்கள் திகழ்கின்றன. பிரிகேடியர் முதல் காவல்துறை, எல்லைப்படை, துணைப்படை, போர் உதவிப்படை வீரர்கள் என சகலரையும் சமமாகவே தன்னுள் ஏற்றுக்கொண்டது இந்த மண். அந்த நிலை தொடர்ந்து பேணப்பட வேண்டும். முதன்மைச் சுடர் ஏற்றுபவரைத் தெரிவு செய்யும்போது மாவீரர் பதவிநிலைகளை கணக்கில் எடுக்கத் தேவையில்லை.

பிரிபடாத தமிழ் தேசத்தினதும் அதன் இறையாண்மையினதும் அங்கீகாரம் என் பதுவே எமது போராட்டத்தின் அடிப் படை. எமது இந்தப் பிறப்புரிமைக்காக லெப்டினன்ட் ஜுனைதீன் (ஜோன்சன்) முதல் 43 முஸ்லிம் மாவீரர்கள், 1985 முதல் 1990 வரை வீரச்சாவடைந்துள்ளனர். 2000 ஆம் ஆண்டின் பின்னரும் இருவர் மாவீர ராகினர். எனவே முஸ்லிம் மாவீரர்களின் உறவுகளும் கௌரவிக்கப்பட வேண்டும்.

தமிழ் தேசத்தைப் பொறுத்தவரை ஒரே ஒரு பிரபாகரன்தான். அவரது நிலையில் யாரும் தம்மை வைத்துப் பார்ப்பதையோ அல்லது அவராக தம்மைச் சித்திரிக்க முனைவதையோ தமிழினம் அனுமதிக் காது. அத்துடன் மாவீரர்நாள் நிகழ்வுக்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ எந்த ஒருவரின் உரையும் தேவையற்றது.

மாவீரர் நாள் நிகழ்வுக்கு முன்னதா கவோ, பின்னதாகவோ எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் அல்லது அரசியல்வாதிக்கும் சார்பாகவோ அல்லது எதிராகவோ பிரசுரங்களை வழங்க வேண்டாம். நிகழ்வு தொடர்பான அறிவுறுத்தல்களை ஒலிபெருக்கி ஊடாக வழங்குவோரும் இந்த வழிமுறைகளைப் பின்பற்றுவது சிறந்தது என்பவையே அவர் முன்வைத்த கோரிக்கைகள்.

மேலும், 2009 இற்கு முன்னர் எந்த உணர்வுடன் துயிலுமில்ல மண்ணை மிதித்தோமோ, எவ்வாறான நிலையில் வெளியில் வந்தோமோ அந்த மனோநிலை அவ்வாறே இப்போதும் பேணப்பட வேண் டும். மாவீரர் வணக்க உணர்வு நிலைக்கு இடையூறு ஏற்படுத்தாது- மாவீரர் நிகழ்வுச் சூழலில் வைத்து அரசியல் விவகாரங்கள் தொடர்பாக செவ்விகள் எடுப்பதை ஊடகவியலாளர்கள் தவிர்க்க வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் எந்த நெருக்கடியிலும் மாவீரர்நாள் நிகழ்வுகளை துணிவுடனும் உணர்வுடனும் தொடர்ச் சியாக நினைவுகூர்ந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழக சமூகங் களின் பங்களிப்பு அளவிட முடியாதது. மாவீரர் நாளையொட்டி சிரமதானப் பணிகளில் உணர்வெழுச்சியுடன் பங்கு பற்றி வரும் அனைவருக்கும் மாவீரர்களின் பெற்றோர் சார்பாக நன்றிகளையும் இச்சந் திப்பில் அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5 ஆம் நாளும் ஓயாத சோதனை

சென்னை,நவ.14
சசிகலாவின் குடும்பத்தினர்களான விவேக், கிருஷ்ணப்பிரியா ஆகியோரின் வீடுகள் மற்றும் ஜெயா டிவி அலுவலகம் என்பவற்றில் வருமானவரித்துறையினரின் சோதனை 5ஆவது நாளாக நேற்றுத் திங்கட்கிழமையும் நடைபெற்றது.
வருமான வரித்துறை "ஒபரஷேன் கிளீன் மணி" என்ற பெயரில் வரி ஏய்ப்புச் செய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பணியைத் தொடங்கி இருக்கிறது. அந்தவகையில், தமிழ்நாட்டில் சென்னை, தஞ்சாவூர், திருச்சி நாமக்கல், கோவை, கர்நாடக மாநிலம் பெங்களூர் உள்ளிட்ட இடங்களில் உள்ள சசிகலாவின் குடும்பத்தினருக்குச் சொந்தமான இடங்களில் வருமான வரித்துறையினர் கடந்த 9 ஆம் திகதி சோதனையைத் தொடங்கினர். சென்னை தியாகராயநகர் அபிபுல்லா சாலையில் உள்ள சசிகலாவின் அண்ணன் மகள் கிருஷ்ணப் பிரியா வீட்டில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். விவேக் வீடு மற்றும் ஜெயா டிவி அலுவலகத்திலும் நேற்றுச் சோதனை தொடர்ந்தது. கடந்த 9 ஆம் திகதி காலை 5.30 மணிக்குத் தொடங்கிய வருமான வரித்துறைச் சோதனை 100 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

# உடைந்தது கூட்டணி

இஸ்லமபாத்,நவ.14
பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் உருவாக்கிய 23 கட்சிகள் அடங்கிய மெகா கூட்டணி, தொடங்கிய ஓரிரு நாளிலேயே உடைந்தது.தேசத் துரோகம், முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ படுகொலை சதி உள்ளிட்ட வழக்குகளில் குற்றம் சாட்டபட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப், கடந்த ஆண்டு பாகிஸ்தானை விட்டு வெளியேறி தற்போது டுபாயில் வசித்து வருகிறார்.
முஷாரப் இராணுவப் புரட்சி மூலம் 1999 இல் ஆட்சியைக் கைப்பற்றி 2008 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தார். 2008 இல் பாகிஸ்தானை விட்டு வெளியேறி லண்டனில் வசித்து வந்தார். கடந்த 2013 ஆம் ஆண்டு நாடு திரும்பி, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார்.
அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மெகா கூட்டணி அமைத்துத் தேர்தலை எதிர்கொள்ளத் திட்டமிட்டார். அதன்படி, 23 அரசியல் கட்சிகள் அடங்கிய பாகிஸ்தான் அவாமி இத்திஹாத் என்கிற மெகா கூட்டணி அமைத்திருப்பதாகவும் அந்தக் கூட்டணிக்குத் தான் தலைமை வகிப்பதாகவும் பர்வேஸ் முஷாரப் டுபாயிலிருந்து காணொலி காட்சி மூலம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அறிவித்தார். அடுத்த ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கூட்டணிக் கட்சிகள் ஒருங்கிணைந்து போட்டியிடும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் அவர் அவ்வாறு அறிவித்த மறுநாளே, மெகா கூட்டணியில் இருந்து சில கட்சிகள் விலகியியுள்ளன. இதன்மூலம், அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் அதிகாரத்துக்கு வர முஷாரப் மேற்கொண்ட முயற்சி முதல் படியிலேயே சறுக்கியுள்ளது. (இ)



# அதிர்ந்தது ஈராக் 350 பேர் மாண்டனர்


பக்தாத்,நவ.14
ஈராக்கின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள சுலைமானியா நகரில் நேற்று முன்தினம் இரவு சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. 7.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 300 பேர் உயிரிழந்துள்ளனர், 4,000 பேர் காயமடைந்துள்ளனர். மீட்புப் பணிகள் நடந்து வருவதாகவும், தற்போதைக்குக் குடிமக்கள் யாரும் கட்டடங்களுக்கு அருகில் செல்ல வேண்டாம் எனவும் அரசாங்கம் எச்சரித்துள்ளது இதன்பின்னர் ஈராக்கின் சுலைமானியா நகரின் தென்கிழக்குப் பகுதியிலும் இன்னொரு நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இதில் 50 பேர் கொல்லப்பட்டதாகவும், 300 க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் நில நடுக்கத்தில் பலியானோரின் மொத்த எண்ணிக்கை 350 ஐத் தாண்டியுள்ளது.
பல பகுதிகளில் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. ரிக்டர் அளவில் 7.3 எனப் பதிவாகியுள்ள இந்த நில நடுக்கத்தின் தாக்கம் இஸ்ரேல், துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளிலும் உணரப்பட்டுள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# பேய்த் த்ரிஷா




ஹைதராபாத்,நவ.14
பேய்ப் படங்களில் நடிக்க விரும்புகிறேன் என்று நடிகை த்ரிஷா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "சினிமாவில் 10 ஆண்டுகளைத் தாண்டுவது கஷ்டம். ஆனால் நான் 15 வருடங்களாக நடித்துக்கொண்டு இருக்கிறேன். அழகிப் போட்டிகளில் வென்று இன்னொரு நடிகைக்குத் தோழியாக சினிமாவில் அறிமுகமாகி பின்னர் கதாநாயகியாக உயர்ந்து தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருப்பதை அதிர்ஷ்டமாகவே கருதுகிறேன். தற்போது 7 படங்கள் கைவசம் உள்ளன. அவற்றில் 3 படங்கள் பேய்கள் சம்பந்தமானவை. மோகினி என்ற முழு நீளப் பேய் படத்தில் நடிக்கிறேன். விரைவில் இந்தப் படம் திரைக்கு வர உள்ளது. காதல், அதிரடிப் படங்களைவிடப் பேய் படங்களைத் தான் நான் விரும்பிப் பார்ப்பேன். ரசிகர்களைப் பயமுறுத்தும் பேய்ப் படங்களில் நடிக்கவும் பிடிக்கும்" எனத் த்ரிஷா கூறியுள்ளார். (இ)

# 'வேலைக்காரன்' படப்பிடிப்பு முடிவு



சென்னை,நவ.14
மோகன் ராஜா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் - நயன்தாரா நடிப்பில் உருவாகி வரும் 'வேலைக்காரன்' படத்தின் படப்பிடிப்பு முழுவதுமாக முடிந்திருப்பதாக நடிகர் ஆர்.ஜே.பாலாஜி அறிவித்திருக்கிறார்.மோகன் ராஜா இயக்கியிருக்கும் இந்தப் படம் சமூகப் பிரச்சனையை மையமாக வைத்து அக்ஷன் படமாக உருவாகியிருக்கிறது. இதில் மலையாள நடிகர் பகத் பாஷில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். பிரகாஷ் ராஜ், சினேகா, ரோகினி, ஆர்.ஜே.பாலாஜி, தம்பி ராமைய்யா, சதீஷ், ரோபோ சங்கர், விஜய் வசந்த் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். 24 ஏ.எம்.ஸ்டூடியோஸ் தயாரிக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையுடன் முடிந்து விட்டதாக நடிகர் ஆர்.ஜே.பாலாஜி அவரது ருவிட்டர் பக்கத்தில் புகைப்படத்துடன் தெரிவித்துள்ளார்.
அனிருத் இசையமைத்திருக்கும் இந்தப் படம் கிறிஸ்மஸை முன்னிட்டு வருகிற டிசெம்பர் 22 இல் வெளியாக இருக்கிறது. அதற்கு முன்னதாகப் படத்தின் இசை வெளியீட்டு விழா விரைவில் பிரமாண்டமாக நடைபெற இருக்கிறது. (இ)

# திருமணம் முன்னே வரவேற்பு பின்னே

சென்னை,நவ.14
ஹைதராபாத்தில் நடைபெற்ற சமந்தா - நாகசைதன்யா திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ், தெலுங்கு திரையுலகைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டு நேரில் வாழ்த்து தெரிவித்தனர். நீண்ட நாட்களாக காதலித்து வந்த நடிகை சமந்தாவும், தெலுங்கு நடிகர் நாக சைதன்யாவும் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டனர். நாகார்ஜூனாவின் மகனான நாகசைதன்யா இந்து மதத்தைச் சேர்ந்தவர். தமிழ் நடிகையான சமந்தா கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். வெவ்வேறு மதத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் கோவாவில் கடந்த ஒக்ரோபர் மாதம் இந்து மற்றும் கிறிஸ்தவ முறைப்படி நடந்தது. இதில் நாகசைதன்யா மற்றும் சமந்தாவின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் திரையுலகத்தினர் என 183 பேர் மட்டுமே பங்கேற்றனர். அதனைத் தொடர்ந்து சமந்தாவும் - நாகசைதன்யாவும் தேனிலவுக்கு வெளிநாடு சென்று திரும்பினார்கள்.



இந்நிலையில், சமந்தா - சைதன்யாவின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை பிரமாண்டமாக நடைபெற்றது. இதில் நடிகர் சிரஞ்சீவி, ராம்சரண், அல்லு அர்ஜூன், நானீ, பிரபு, விக்ரம் பிரபு, வெங்கடேஷ், இயக்குநர் எஸ்.எஸ்.ராஜமவுலி உள்ளிட்ட தமிழ், தெலுங்கு திரையுலகத்தைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சானியா மிர்சா காயம்

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் இருக்கிறேன் என இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் அவர் தெரிவித்ததாவது:

'என்னுடன் விளையாடிய இணைகள் காயமடைந்ததால் இந்த ஆண்டு கடிமாக அமைந்து விட்டது. இந்நிலையில் எனக்கும் முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த ஒரு மாதமாக போட்டிகளில் பங்கேற்கவில்லை. இன்னும் இரு வாரங்கள் ஓய்வெடுக்கவுள்ளேன்.

இக்காயத்திற்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். எனினும் தரவரிசையில் 12 ஆவது இடத்தில் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது - என்றார்.

### - ஃபெட் கிண்ண ரென்னிஸ் -

# 18 ஆவது முறையாக அமெரிக்கா சம்பியன்



ஃபெட் கிண்ண ரென்னிஸ் தொடர் சம்பியன் பட்டத்தை 18 ஆவது முறையாகக் கைப் பற்றி அமெரிக்கா சாதனை படைத்துள்ளது.

பெலாராஸ் அணியை எதிர்த்து அமெரிக்கா நடத்திய பலப்பரீட்சையில் இரு அணிகளும் 2 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தன. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இறுதி இரட்டையர் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

அமெரிக்காவின் செல்பி ரோஜர்ஸ், கோகோ வண்டேவெஜ்கே இணை பெலாரஸின் அரினா சபாலென்கோ, அலியாக் சண்ட்ரா சஸ்னோவிச் இணையை 6 - 3, 7(7) -6(3) என்ற செற் கணக்கில் வென்று சம்பியனைக் கைப்பற்றியது.

# நான்காவது தடவையாக தந்தையானார் றொனால்டோ

பிரபல உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ நான்காவது தடவையாக தந்தையானார்.

அவரின் காதலி ஜோர்ஜியா றொட்ரிக்ஸூக்கு நேற்று முன்தினம் பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அலானா மார்ட்டினா எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்நிலையில் முதல் மகன், காதலி, பிறந்த குழந்தையுடன் தான் எடுத்த படத்தை சமூகவலைத்தளத்தில் றொனால்டோ பதிவேற்றியுள்ளார்.

முன்னதாக றொனால்டோவுக்கு வாடகை தாய் மூலமாக இரட்டைப் பெண் குழந்தைகளைப் பெற்றிருந்தார்.

7 இலக்கத்தை றொனால்டோ தனது அதிர்ஷ்ட இலக்கமாகக் கருதுகிறார். அந்த இலக்க ஜேர்சியுடனே மைதானத்திலும் களமிறங்குகிறார். இந்நிலையில் தான் 7 குழந்தைகளை பெற்றுக்கொள்ள விரும்புகிறேன் என அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை - இந்திய அணிகளின் பயிற்சி ஆட்டம் சமநிலையில்



இலங்கை - இந்திய பதினொருவர் அணிகளின் பயிற்சி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இந்தியா சென்றுள்ள இலங்கை தலா 3 போட்டிகள் கொண்ட டெஸட், ஒருநாள், ருவென்ரி -20 தொடரில் பங்கேற்கவுள்ளது. இந்தப் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை கொல்கத்தாவில் தொடங்கவுள்ளது.

முன்னதாக இலங்கை அணி இந்திய கிரிக்கெட் சபையின் பதினொருவர் அணியுடன் 2 நாள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் மோதியது. கொல்கத்தாவில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 411 ஓட்டங்களை எடுத்து துடுப்பாட்டத்தை நிறுத்தியது.

பதிலுக்கு ஆடிய இந்திய பதினொருவர் அணி இரண்டாம் நாள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 287 ஓட்டங்களை எடுத்தது. அணியின் தலைவர் சாம்சன் 128 ஓட்டங்களை 19 பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் பெற்றார்.

இரு அணித் தலைவர்களும் ஆட்டத்தை முடிக்க சம்மதம் தெரிவித்ததால், ஆட்டம் சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: மத்தியூஸ் பந்து வீசமாட்டார்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சகலதுறை வீரர் அஞ்சலோ மத்தியூஸ் பந்து வீசமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகலதுறை வீரரான மத்தியூஸ் கடந்த 12 மாதங்களாக தொடர் காயங்களுக்கு உள்ளாகி வருகிறார். இதனால் அவர் முக்கிய போட்டிகளில் விளையாட முடியாது போனது. இலங்கை அணியின் பின்னடைவுக்கு இதுவும் ஒரு காரணம்.

எனவே வரும் வியாழக்கிழமை தொடங்கவுள்ள இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் பந்துவீசமாட்டார். துடுப்பாட்ட வீரராகவே களமிறங்குவார் என அணியின் பயிற்றுவிப்பாளர் ருமேஷ் ரட்ணாயக்க அறிவித்துள்ளார்.

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 14.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.